# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.113/2013** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **பி.சா-03 ( DW- 03 )** |
| **பெயர்** | :- | **சுகனேஷ்வரன் த/பெ. கந்தசாமி** |
| **தேதி** | :- | **24-03-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**01-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

முதலேற்பு வழக்கு எண்.113/2013, 185/2019, 186/2019 ஆகிய மூன்று வழக்குகளிலும் நான் பிரதிவாதியாக உள்ளேன் என்றால் சரிதான். மூன்று வழக்குகளிலும் நான் எதிர்வழக்குரை தாக்கல்செய்தபிறகு கூடுதல் வாதுரையும் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரை -யிலும் கூடுதல் வாதுரையிலும் என்ன விவரம் சொல்லியுள்ளேன் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வழக்குச் சொத்தை நானோ எனது மனைவியோ மாமியாரோ நேரடியாக சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து எங்கு உள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நானும் வாதி இராஜேந்திரனும் ஒரே இடத்தில் பணிபுரிந்ததால் நம்பிக்கையின்பேரில் கடனுக்கு பிணையமாக பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் அசல் ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணங்களை நான் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் கடனுக்கு பிணையமாக பகர அதிகாரப் பத்திரம் வாங்கியதால்தான் அசல்

ஆவணங்களை வாங்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணைக்கான ஆணையுறுதியை என்ன காரணத்திற்காக தாக்கல்செய்துள்ளேன் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு எதற்காக நடக்கிறது என்ற விவரம் எனக்குத் தெரியும். எனக்கு பகர அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களின் தன்மை கொண்டவை என்றால் சரிதான். வாதி இராஜேந்திரன் என்னிடம் வாங்கிய 04 இலட்சம் உரூபாய் கடனுக்காக பகர அதிகாரப் பத்திரம் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரிதான். கூடுதல் வாதுரை தாக்கல்செய்தபோது தான் எனக்கு மற்ற விவரங்கள் தெரியவந்தது என்றால் சரிதான்.

எனக்கு கொடுக்கப்பட்ட பகர அதிகாரப் பத்திரத்தின் அடிப்படையில் 05.02.2013-ஆம் தேதியன்று என் மனைவி பெயரில் பெயரளவில் கிரய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்துவிட்டு 28.02.2013-ஆம் தேதியன்று என் மாமியார் பெயரில் பெயரளவில் மறுபயன் இல்லாமல் கிரய ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான்.

என் மாமியார் கிரயம் கொடுத்த இராமலிங்கம், முத்துசாமி ஆகியோரு -க்கு வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாறவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் சுவாதீனம் இந்நாள்வரை இராஜேந்திரன் வசம் உள்ளது என்றால் சரிதான். இராஜேந்திரன் என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். இராஜேந்திரன் எனக்கு கொடுக்க வேண்டிய கடன் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். இராமலிங்கத்திடம் நான் 05 இலட்சம் உரூபாய் கடன் கேட்டேன். 03 இலட்சம் உரூபாய் இராமலிங்கம் கடன் கொடுத்தார். அந்த கடனுக்கான

வட்டியை நான் கொடுத்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த கடனுக்காக-தான் இராமலிங்கம், குப்புசாமி ஆகியோர் பெயரில் பிணையத்திற்காக கிரயம் செய்துகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இராமலிங்கத்திற்கு நான் எழுதிக் கொடுத்த கிரயத்தை இரத்து செய்து இராஜேந்திரனுக்கு மறு கிரயம் கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான்.

எனக்கு இராஜேந்திரன் எழுதிக் கொடுத்த பகர அதிகாரப் பத்திரமும் நான் மற்றவர்களுக்கு எழுதிக் கொடுத்த உரிமைமாற்ற ஆவணங்களும் பெயரளவில் ஏற்பட்டவை என்றும் சொன்னால் சரிதான். நான் இராமலிங்கம், குப்புசாமி ஆகியோருக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரங்களை இரத்து செய்து வாதி இராஜேந்திரனிடம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். இராஜேந்திரன் தொடுத்துள்ள வழக்கில் அவர் கோரியுள்ள நிவாரணத்தை வழங்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.